ஏழைமையும் வேலையில்லாத் திண்டாட்டமும்

Regd. No. M 6207

CONNEMARA PUBLIC LIBRARY
3 JAN 1956

# கிராமோதயம்

ஆசிரியர்: ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - நவம்பர் 15 * 1953 * விலை 1 அணு | இதழ் 2

## மது விலக்கு!

### பொய்ப் பிரசாரம்.

**** "இந்த தேசத்திலுள்ள (கள்) குடி வளர்ப்பு ஆதரவாளர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலும், திருட்டுக் கள்ளிறக்கும் பழக்கமும், மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால் நின்றுவிடும் என்று எண்ணினுல் முற்றிலும் ஏமாற்றமடைவார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இந்த உண்மையை நாங்கள் அமெரிக்காவில் இன்று உணருகிறோம். எமது (அமெரிக்க) மதுவிலக்கு நாட்களில் அதை ரத்து செய்ய வேண்டுமென்று வாதாடியவர்கள், மதுவிலக்கு சட்டத்தை ரத்து செய்து விடுவோமானுல் தேசத்தின் சகல இன்னல்களும் தீர்ந்துவிடும் என்று எமக்கு உறுதி கூறினுர்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுதல், அதை விற்பனை செய்தல் ஆகியவைகளோடு இணைந்து கிடக்கும், சட்டவிரோதமான செயல்களும், கடும் குற்றங்களும மறைந்து விடும் என்று கூறினுர்கள்."

### மதுவிலக்கு போச்சு; ஆனுல் கள்ளச்சாராயம்?

அமெரிக்காவில் மதுவிலக்கு ரத்தாகிவிட்டது! ஆனுல் கள்ளச்சாராயம் காய்ச்சுதலும், விற்பனையும் நின்றுவிட்டதா?

சில நிபுணர்கள் இன்று அமெரிக்காவிலிருக்கும் சட்டபூர்வமான சாராயச்சாலை ஒன்று இருந்தால், சட்டவிரோதமான கள்ளச் சாராயச் சாலைகள் 100 இருக்கிறதென்று மதிப்பிடுகிறுர்கள். இந்த சட்டவிரோதமான கள்ளச்சாராயச் சாலைகளில் வருடம்தோறும் சுமார் 18,000,000 காலன் (1 கோடி 80 லக்ஷம் காலன்) கள்ளச் சாராயம் காய்ச்சுவதாக மதிப்பிடப்படுகிறது. கௌரவம் வாய்ந்த சமூகத்திற்கு விரோதியான இந்தக் கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மாதம் தோறும் 1000 பேர்கள் வீதம் கைது செய்யப் படுகின்றனர்.

### சட்டத்தை ரத்து செய்து சட்டவிரோதிகளை ஒழிக்கமுடியாது.

கள்ளச் சாராயத்தையும், திருட்டுக் கள்ளையும் ஒழிக்க மதுவிலக்கு சட்டத்தை ரத்து செய்வது வழியல்ல. அப்படி ரத்து செய்வதினுல் இந்த சட்ட விரோதமான செயல்கள் அதிகரிப்பதாகவே அமெரிக்க அனுபவம் கூறுகிறது.

லாஹிரி வஸ்துக்களின் உபயோகம் சம்பந்தமான வேறு சில படிப்பினைகளையும் (அமெரிக்கா) எமது தேசம் கற்றுக்கொண்டுவருகிறது—அல்லது கற்றுக்கொண்டு விட்டது! அவைகளில் முக்கியமானது இவை மனித சக்தியையும், பொருட்களையும் விரயமாக்குவதே!

### கள்ளோடையில் கரைந்து செல்லும் செல்வம்!

1951 வருடம் அமெரிக்க மக்கள் போதையூட்டும் பானங்களுக்காக சுமார் 9,150,000,000 டாலர் (ரூ. 45,750,000,000) செலவழித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது!! அதாவது அங்கு வருடம் பூராவும் மணிக்கு 1,000,000 டாலர் (ரூ. 50 லக்ஷம்) வீதம்-போதை தரும் பானங்களுக்காக அவர்கள் செலவிட்டிருக்கிறுர்கள்!!

### இறுதி வெற்றி நிச்சயம்.

அமெரிக்காவில் மதுபானம் சம்பந்தமான சில புள்ளி விபரங்களை கொடுத்தேன். இந்தியாவில் மதுவிலக்குக்காக போராடி வருகிறீர்கள். உங்களுக்கு இந்த புள்ளி விபரங்கள் உற்சாகமூட்டும் என்று நம்புகிறேன். நீங்கள் முன்னேறி வருகிறீர்கள். உங்கள் போராட்டம் பாராட்டத்தக்கது. உங்கள் தரப்பில் நீதியும், நியாயமும் இருக்கிறது. கடைசியில் வெற்றி நிச்சயம்!!

**திரு. எ. வி. ஓல்சன்,**
உபதலைவர், அகில உலக மது ஒழிப்பு சங்கம்.

[சென்ற ஆகஸ்டு மாதம் அகில இந்திய ரேடியோவின் பம்பாய் நிலையத்திலிருந்து ஒலி பரப்பியதின் ஒரு பகுதி.)

★

## ஆரோக்கியத்தை சீர்குலைக்கும் அலுமினியம்!!

(முன் இதழ் 3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### புற்று நோய்

இதை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள மற்றொரு டாக்டர் ஸ்ரீ சி. ஜெவ்ஸ்கி (Tchjeuskp) யின் ஆராய்ச்சிகளின் பயனுக அலுமினியப் பாத்திரங்களில் வைக்கப்பட்டுள்ள உணவளிக்கப்படும் எலிகள் அலுமினியம் தீண்டாத எலிகளைக் காட்டிலும் 40 மடங்கு எளிதில் (கான்ஸர்) புற்றுநோய் தாக்கும் நிலையடைகின்றன என்று சொல்லுகிறுர்.

### தெரிந்திருந்தும் பரவுகிறது!!

இவ்வளவு விஞ்ஞான விபரங்களும் கிடைத்திருந்தும் அலுமினியப் பாத்திரங்கள் தயாரித்து விற்பனை செய்து விரிவடைந்து வருகிறது. அலுமினியம் தேகாரோக்யத்திற்கு தீங்கிழைக்கும் என்பது தெளிவான விஷயம். தேகத்தின் ஆரோக்யம் பல புது ரக நோய்களாலும் பாதிக்கப்பட்டும், பீடிக்கப்பட்டும் இருக்கிறது என்பது நிச்சயம். அலுமினியத்தைக்காட்டிலும் சிறந்த பாத்திரங்கள் கீழ்கண்டவை:-

### மண்பாண்டங்கள் சிறந்தவை

1. மண்பாண்டங்கள்: இவைகளை உபயோகிப்பதின் மூலம் நமது ஆரோக்யத்திற்கு எவ்வித குந்தகமும் ஏற்படுவதில்லை என்பதோடு ஏழை குயவர்களுக்கும் பிழைப்பளிக்கும். சேகரித்து பாதுகாப்பளிக்க மெருகேற்றின மண்பாண்டங்கள் சிறந்தவை.

2. அடுத்தபடியாக எனமல்–ஸ்டேயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை சொல்லலாம் (Enamels and Stainless Steel) இவைகளை நாம் ஒரு பொழுதும் சிபார்சு செய்ய முடியாது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

3 - JAN 1956

கிராமோதயம்
நவம்பர் 15 1953

# ஏழைமையும் — வேலையில்லாத் திண்டாட்டமும்

### தேசத்தின் இரண்டு பெரும் பிரச்னைகள்

ஏழைமையும், வேலையில்லாத் திண்டாட்டமும்தான் இன்றைய நம் தேசத்தின் முன்னுள்ள இரு பெரும் பிரச்னைகள் என்று ஏனையோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஏழைமையை அகற்றி விட்டால் மற்ற பல பிரச்னைகளும் தாமாகவே தீர்ந்துவிடும். மற்றும் பல பிரச்னைகளைத் தீர்ப்பது சுலபமாகிவிடும். இதை சற்று ஆராய்வோம்.

### பணமில்லாதிண்டாட்டமா,வேலையில்லாதிண்டாட்டமா?

வேலை இல்லாமல் திண்டாடுபவர் என்பதின் பொருள் உண்மையில் தன் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான பணமில்லாதவர் என்பதுதான். அவருக்கு அந்த பணம் கிடைக்க வேலை வேண்டும், ஆனால் கைவசம் போதிய பணம் இருக்கும் ஒருவர் ஒரு வேலையும் செய்யாமலிருந்தாலும் அவர் வேலையில்லாமல் திண்டாடுவதாக கருதப்படுவதில்லை. ஆகையால் அடிப்படையான விஷயம் மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதே. ஏழைமை என்பது இந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமையால் தோன்றுவது. பணம் இந்த தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சாதனம் மாத்திரம் தான்.

### வாழ்க்கைத் தேவைகள்

மனிதனுடைய வாழ்க்கைத் தேவைகள் — உணவு, உடை, வீடு ஆகியவைகளே அதாவது அவனுக்கு கோதுமை, அரிசி, பால், இரும்பு, சுண்ணும்பு முதலியன தேவை. பணத்தை யாரும் உணவாகவோ, உடையாகவோ, வீடுகளாகவோ உபயோகிப்பதில்லை. அது பலர் தயாரிக்கும் பொருட்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளுவதற்கான சாதனமாகவே உபயோகப்படுகிறது.

### தேவைகளின் பூர்த்தியல்ல, தேவைகளின் பெருக்கம்

இன்று ஓங்கியுள்ள நவீன இயந்திர நாகரீகத்தின் அடிப்படை மனிதன் தேவைகளை பெருக்கிக் கொண்டே செல்வதாகும். பணம் படைத்த முதலாளிகள் இந்தத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டே சென்று ஏராளமான பணம் சம்பாதிக்கின்றனர்; தங்கள் செல்வாக்கையும் பெருக்கிக் கொள்ளுகிறார்கள். மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய உழைக்கிறான்; ஆனால் இயந்திர சாலைகளோ, மனிதன் தேவைகளை பெருக்குவதற்கே செயல்பட்டு வருகின்றன. ஆகையால் இயந்திர மயமான உற்பத்தி முறை மக்கள் நலனுக்கு எதிராக வேலை செய்கின்றது. அதன் பலனைத் தான் இன்று நாடெங்கும் ஏழைமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் பரவி வருகின்றன.

### இயந்திரப் பொருட்கள் ஏழைமையை வளர்ப்பவை

தேவைகளை அதிகரிக்கும் எந்த பொருளும் ஏழைமையை வளர்ப்பவையே! தேவைகளை பூர்த்தி செய்பவை ஏழைமையை அகற்றுபவை! மனிதன் உயிர்வாழ உணவு தேவை. தன் தேவைக்குத் தக்க உணவு வாங்க இயலாதவன் ஏழை. ஆனால் மனிதனுக்கு உணவே தேவையில்லையானால் உணவுப் பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் ஏழைமை தோன்றாது.

இயந்திர தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் சில பொருட்களையும், இயற்கையான சில பொருட்களையும் உபயோகப்படுத்தினால் ஏற்படும் விளைவுகள் சிலவற்றை ஆராய்ந்து விளக்குவோம்.

மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டே உழைக்கிறான். ஆனால் இன்று பணம் செலவாக, செலவாக தேவைகள் பூர்த்தியடைவதற்கு பதில் அதிகரித்து வருகின்றன.

### மோட்டார் வாங்கினால் பெட்ரோல் வாங்க பணமில்லாத ஏழைமை!

உதாரணமாக ஒரு மனிதன் ரூ. 15,000 கொடுத்து ஒரு மோட்டார் கார் வாங்குவதாக வைத்துக்கொள்வோம், மோட்டார் கார் இன்றைய இயந்திர யுகத்தின் முக்கிய உற்பத்தி பொருள். அது அவருடைய அடிப்படைத்தேவைகள் ஒன்றையும் பூர்த்தி செய்வதில்லை. அவரது தேவைகளே அதிகரிக்கின்றன. அவருக்கு இப்பொழுது டயர், ட்யூப், பெட்ரோல், ஆயில், ஒரு கார் ஓட்டுபவர், ஒரு கார் சுத்தம் செய்பவன், கார் நிறுத்த ஒரு ஷெட் போன்றன தேவை. சிலநாட்களுக்குப் பின்னர் கார் ரிப்பேர் செலவுகளும் ஆரம்பமாக பெருகி விடுகின்றன. அவருக்கு பெட்ரோல் வாங்க கைவசம் பணமில்லையானால் அவர் தன்னை மிகவும் ஏழையாக எண்ணுகிறார். கார் இல்லாத ஒருவருக்கு பெட்ரோல் வாங்க பணமே வேண்டியதில்லை. கார் பயனற்ற ஒரு பொருள் என்று நாம் கூறவில்லை! ஆனால் கார் இருக்கும் பெரும்பாலோருக்கு அது ஒரு பெரிய சுமையும், பயனற்ற ஆடம்பரமுமாக இருக்கிறதென்பதை வலியுறுத்துகிறோம்.

### சிகரெட்டும் - டீயும்

சிகரெட்டும், டீயும் நவீன உலகத்தின் மற்றுமிரு சிருஷ்டிகள். டீ குடிப்பதும், சிகரெட் பிடிப்பதும் தற்சமயம் மதிப்பிற்குரிய பழக்கங்களாகவே கருதப்படுகின்றன. ஆனால் டீயும், சிகரெட்டும் மனிதனுடைய அடிப்படைத் தேவை ஒன்றையும் பூர்த்தி செய்வதில்லை. நேர்மாறாக அவை மனிதன் உடல் நலத்திற்கு பெருத்த தீங்கிழைக்கின்றன. மக்கள் இவைகளுக்காக பணம் செலவழிக்கிறார்கள் பிறகு இவைகளால் தோன்றும் வியாதிகளைப் போக்க மேலும் அதிக பணம் செலவழிக்கிறார்கள்.

### பாலும் — தேனும்.

பண்டைய நாட்களிலிருந்தே மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அறிகுறியாக விளங்கி வந்துள்ள பால், தேன் முதலியவைகளை உபயோகிப்பதால் ஏற்படும் விளைவுகளைக் கவனிப்போம்.

பாலும், தயிர், நெய் போன்ற பொருட்களும், பசு, அல்லது எருமைகள் மூலம் உற்பத்தியாகின்றன. பால் மனித உணவுப் பொருட்களில் சிறந்தது. பால் மட்டும் அருந்தியே மனிதன் ஆரோக்யமாக உயிர் வாழமுடியும். நமது உணவில் போதிய பால் இல்லாமையாலே க்ஷயம், கண் குருடு, பல் சொத்தை போன்ற பலவித வியாதிகள் தோன்றுகின்றன. பாலும் அதை தரும் பசுவும் நமக்களிக்கும் சில உதவிகளை பாருங்கள்!

### பசுப் பாதுகாப்பின் சிறப்புக்கள்.

1. பால் ஜீர்ணேந்திரியங்களை பூரண ஆரோக்கியத்திலிருக்கச் செய்கிறது. இதனால் நாம் அருந்தும் உணவிலிருக்கும் உயிர்ச்சத்துக்களனைத்தையும் கிரகித்துக்கொள்ளலாம். ஆகையால் குறைவான ஆகாரம்தான் தேவைப்படும்.

2. உடல் நலம் திருப்திகரமாக இருப்பதால் வியாதிகளை சொஸ்தப்படுத்தும் செலவுகளை தவிர்கலாம்.

3. புல், பிண்ணுக்கு முதலியவை தின்று அவைகளை பசு, பாலாக மாற்றித்தருகிறது. மாட்டுச் சாணம் சிறந்த உரம். தற்போதிருக்கும் உணவு பற்றுக்குறை இந்த உரத் தட்டுப்பாட்டால் நேர்ந்துள்ள விபரீதமே! தற்சமயம் ஏக்கருக்கு சராசரி உற்பத்தியாகிவரும் 12 மணங்கு கோதுமை, மாட்டுசாணம் உபயோகப்படுத்துவதனுல் சுலபமாக இரட்டிக்கலாம்.

4. பசு, நிலத்தை உழுது பண்படுத்தவும், தண்ணீர் இறைக்கவும், போக்குவரத்திற்காகவும் எருதுகளையும் தருகிறது.

5. பசுவை ஒருமுறை வாங்கினுல் போதும், அதுவே அதிக பசுக்களை ஈன்று தருகிறது. நேர் மாருக மோட்டார் கார் நாலு அல்லது ஐந்து வருடங்களில் புதிது புதிதாக கார் மாற்றி வாங்காவிட்டால் அதை ரிப்பேர் செய்யும் செலவு மிகவும் அதிகரித்துவிடுகிறது.

6. பசு இறந்த பின்னர், அதன் தோல் பாத ரக்ஷைகள் செய்யவும், எலும்புகள் சிறந்த உரமாகவும் பயன்படுகிறது.

**தேனு — தெள்ளமுதா?**

தேன் இயற்கையின் சிறந்த இனிப்பு; பல்லாண்டுகளாகவே நாம் அதை அமுதமாகக்கருதி வந்துள்ளோம். உணவுக்கும் ஆரோக்கியத்திற்கும் தேன் எவ்வளவு சிறந்த சாதனமாக இருக்கிறதென்று உலகம் நன்கறியும்.

**தாவரம் தழைக்க.**

தேனைத் தரும் ஈக்கள் மற்றுமொறு சிறந்த சேவை செய்கின்றன. அவை தாவரங்களின் பூக்களுக்கிடையே தாவித்தாவி பூந்தாதுவை பரப்பி செழுமைப்படுத்துகின்றன. உலகிலுள்ள விளை பொருட்களில் சுமார் 90% (நூற்றுக்கு தொண்ணூறு வீதம்) தேனீயால் செழுமைப்பட்டவை என்பது ஒரு விஞ்ஞான உண்மை. விவசாய தேசமான இந்தியாவில் தேனீக்களை இவ்வளவு குறைவாக வளர்த்து வருவதானது மிகவும் வருந்தத்தக்கது.

**தேனீக்களைப் புறக்கணித்தோம்.**

வருடந்தோறும் கனடா தேசம் 360 லக்ஷம் ராத்தல் தேன் சேகரித்து வருகிறது, இந்தியாவில் கோடிக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள தேன், அதை சேகரிக்க ஆள் இல்லாததால் சூரியவெப்பத்தாலும், காற்ருலும் சேதமாகிவிடுகிறது. சிறந்த முறையில் தேனெடுக்க தெரியாததினுல் லக்ஷக்கணக்கான தேன் கூடுகள் அழிக்கப்படுகின்றன. வெளி நாடுகளில் தேனீ வளர்த்தல் சர்க்காரால் உற்சாகமூட்டப்பட்டுவரும் கைத்தொழிலாக நடைபெறுகிறது, இதற்கு தேனும், மெழுகும் மட்டும் காரணங்களல்ல. இவை முக்கியமாயினும், அதிக உற்பத்திக்காக தாவர பூந்தாதுவை பரவச் செய்வதும் ஒரு பெரிய சேவையே. தேன் மூலம் கிடைக்கும் அனுகூலங்களைக் காட்டிலும், விவசாயத்திற்கும், பழத்தோட்டங்களுக்கும் 15 மடங்கு அதிக சேவை தேனீக்களால் கிடைத்து வருகிறது. நமது வயல்களிலும், தோட்டங்களிலும் உற்பத்தியாகவேண்டிய காய்கனிகளில் பாதி தேனீக்களின் இந்த உதவி இல்லாத காரணமாக நாம் பிரதி வருடமும் இழந்து வருகிறோம் என்று கூறினுல் அது மிகையாகாது.

**பணம் குவிகிறது — ஏழைமை பரவுகிறது.**

மேலே கூறியதிலிருந்து, பால், பாலிலிருந்து தயாராகும் பொருட்கள், தேன், பசு, தேனீக்கள் போன்றவை நமது அடிப்படையான பல தேவைகளை பூர்த்தி செய்வதோடு, ஏழைமையை பல முறைகளிலும் முறியடிக்க உதவுகின்றன. இந்த மேன்மைதரும் பொருட்களை அதிகமாக புறக்கணித்து, ஏழைமையை உற்பத்தி செய்து, வளர்க்கும் இயந்திரத்தொழிற்சாலைகளின் பெருவாரியான உற்பத்திப் பொருட்களை அதிகமாக உபயோகப் படுத்துவதே, நாம் நாளுக்குநாள், ஏழைமையடைவதற்கும் காரணம்!!!

காசி சர்வகலாசாலை, 29—5—'53. } **பேராசிரியர், எம். ஆர். அகர்வால்.**

---

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இவை நம் தேசத்தில் தயாராகவில்லை. வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. விலையும் மிக மிக அதிகம்.

**அலுமினியம் 10 லக்ஷம் குயவர் குடும்பங்களை சீர்குலைத்து விட்டது**

பண்டை நாட்களில் கிராமந் தோறும், 5 அல்லது 10 குயவர்கள் கிராம மக்களுக்குத்தேவையான பாத்திரங்களை தயாரித்துக் கொடுத்து வந்தனர். சுகவாழ்வும் நடத்தி வந்தனர். நமது ஜனங்கள் மண்பாண்டங்களில் பக்குவமாக்கிய உணவுப் பொருட்கள், உலோகங்களால் தாயாரிக்கப்பட்ட பாண்டங்களில் சமைத்ததைக் காட்டிலும் சுவையும், சிறப்பும் மிக்கதென்று நன்கறிவார்கள். இந்த மண்பாண்டங்கள் சுலபமாக எவருக்கும் கிடைக்கும். சமீப காலத்தில் நாகரீக மோகத்தின் காரணமாகவோ, வெளிப் பகட்டுக்காகவோ, இந்த மண்பாண்டங்களை தயாரிக்கும் குயவர்கள்கூட அலுமினியப் பாத்திரங்களை உபயோகப் படுத்தலானுர்கள் ஆனுல் இதன் விளைவுகள் பற்றி அவர் ஒன்றும் அறியார். இக் கைத்தொழில் வல்லவர்களான சுமார் 10 லக்ஷம் கும்பார குடும்பங்கள் இன்று வேலையின்றித் தவிக்கின்றனர். அவர்களது வேலை அலுமினியத் தொழிலதிபர்கள் வசம் சென்று விட்டது. — **கிருஷ்ணமூர்த்தி மிர் மிரா.**

★

## கதரின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற முதன் மந்திரி ராஜாஜிக்கு வேண்டுகோள்

கதர்த்துணியை யார் வேண்டுமாணுலும் தயார் செய்யலாம், விற்கலாம் என்ற உத்திரவு கதர்த் தொழிலுக்கு பெரிய அபாயம் விளைவித்துள்ளது.

சிலர், போண்டா கதர், மில் நூல் கலந்த கதர்த் துணிகளை வைத்துக்கொண்டு ஸ்ரீ காந்திஜி, நேருஜி அவர்களின் பெயர்களை உபயோகித்து இது சுத்தமான கதர், அகில பாரத சர்க்கா சங்க கதர் என்று சொல்லி விலை சகாயமாய் விற்பனை செய்கிருர்கள். பொது மக்கள் விலை குறைவு என்று ஏமாறுகிருர்கள். கதர்த்துணி என்பதே (சுத்தமானது என்றுள்ளது) அழிந்துவிடும்போல் தெரிகிறது. தயவு செய்து சுத்தக்கதர் அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளிலும் சர்க்கார் கதர் சென்டர்களிலும் மட்டிலுமே விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டுகிறேன்.

தளவாய்பேட்டை, 10—11—'53. } **கே. ஏ. எல். வேணுகோபால், தமிழ்நாடு காங்கிரஸ் அங்கத்தினர்.**

3-JAN 1956



## நிர்வாகம்! புரோகிதம்! வியாபாரம்! அரசாட்சி! நான்குவித சுரண்டல்கள்!

ஸ்ரீ வினோபாஜிக்கு பீஹாரில் சங்கராம்பூர் என்ற கிராமத்தில் பிரமாதமான வரவேற்பளிக்கப் பட்டது. அங்கு பூஜ்ய ஸ்ரீ வினோபா நிகழ்த்திய சொற்பொழிவின் சில பகுதிகளை கீழே தருகிறோம்;

"கிராமத்திலிருக்கும் விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவோ, அவ்வளவு பூமிதான பத்திரங்கள் கிடைக்கவேண்டும், மேலும் சீக்கிரமாக ஜில்லாவின் கோட்டாவை பூர்த்தி செய்ய முயல வேண்டும்.

"நிர்வாக ஏற்பாடுகளை முற்றிலும் ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். யாரைப்பார்த்தாலும் ஏற்பாடு செய்வதற்கு அலைவதாகக் காண்கிறேன். இதனால் எவ்வளவோ வேலைகள் கெட்டு விடுகின்றன. புரோஹிதர்களும், சர்க்காரும், வியாபாரிகளும் ஏற்பாடுகள் செய்வதென்ற பாசாங்கில் சமூகத்தை சுரண்டுபவர்களாக மாறியிருக்கின்றனர். இந்த குறைகளிலிருந்து விடுபட்டு, சுயம் பூர்த்தி அடிப்படையில் நாம் முயற்சி செய்வதே சிறந்த வழியாகும். நிர்வாக வர்க்கத்தின் (Managerial Class) முடிவுக்கு ஏற்பாடு செய்வதே நமது வேலையாகும்!!"

"கடவுள் மக்களை சமூகமாக வாழ்வதற்கே படைத்தனுப்பியுள்ளார். சமூகம் இயங்க அதற்கு சில அடிப்படையான தர்மங்களிருக்கின்றன. அதை ஒட்டி சமூக வாழ்க்கை நடைபெறவேண்டும். ஆனால் இன்று அவ்வாறு நடைபெறவில்லை."

"கிராம மக்கள் ஒருவர் மற்றொருவரைப்பற்றி சிந்திப்பதே இல்லை; ஒருவர் மற்றொருவரை பொருட்படுத்துவதே கிடையாது; ஒருவர் மற்றொருவருக்கு உதவியளிப்பதும் இல்லை. சுருக்கத்தில் சமூக தர்மம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. சமூக ஒழுக்கம் சீர்குலைந்துவிட்டது."

"கிராமக் கைத்தொழில்கள் மூலமாகவும், பூமிதான யக்ஞ இயக்கம் மூலமாகவும் சமூக ஒழுக்கத்தை மீண்டும் ஓங்கச்செய்யவேண்டும்!!"

— வினோபா

## சம்பத்து தானம் — வினோபாவின் புதிய இயக்கம்

"இப்பொழுது வினோபாஜி தேசத்திற்கு ஒரு புது வேலைத் திட்டம் அளித்திருக்கிறார். நிலமற்ற உழவர்களை புனரமைக்கும் பொருட்டும் அவர்களுக்கு உதவும் பொருட்டும் சம்பத்துதான இயக்கத்தை ஆரம்பித்துள்ளார். முக்கியமாக விளைநிலங்களுக்கு தண்ணீரளிக்கும் பொருட்டு புதிய கிணறுகள் வெட்டவே இவை பயன்படும். விவசாயிக்கு, வேறு எவ்வித உதவியும் இல்லாமல், வெறும் நிலம் மட்டும் கிடைப்பதினால், பெருத்த லாபம் ஒன்றும் அடைய முடியாது. தேசமெங்கும் நீர்பாசன வசதி ஏற்படுத்த கிணறுகள் பெருவாரியாக தேவைப்படும். வினோபாஜியின் இந்த புதிய யோசனையைப் பற்றி அனைவரும் ஆழ்ந்து சிந்தனை செய்வார்கள் என்றும், கிணறுகள் வெட்டிக் கொடுப்பதற்கு விசேஷ உதவியளிப்பார்கள் என்றும் நம்புகிறேன்."

— ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு

## புரட்சிகரமான சங்கற்பம்-பணத்திலிருந்து விடுதலை

சம்பத்து தானம் பணத்தின் கௌரவத்தை (செல்வாக்கை) உடைத்தெறியும் இயக்கம். பொருளுற்பத்திக்காக உடலுழைப்பின் பெருமையை தேங்கச் செய்யும் இயக்கம். அதில் மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான வஸ்துக்களை வினோபாஜி காண்பிக்கவில்லை. அவ்வகை வாழ்க்கை சாதனங்களை வாங்கும் சாதனமாகக்கூட பணத்தை அவர் காட்டவில்லை. மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களை தயாரிக்கும் கருவிகளை வாங்கிக் கொடுப்பதாகவே கூறுகிறார். ஆகையால் அவர் சம்பத்து தான இயக்கத்தை விளக்கிக்கூறும்பொழுது, தான் ஒருவரிடமும் ரொக்கம் வாங்கப்போவதில்லை என்றும், தனக்கு உதவ விரும்புவோர்கள், உற்பத்திக்கு உதவும் சாதனங்கள், அல்லது கருவிகளாக வாங்கி தருமாறு வேண்டிக்கொண்டுள்ளார். இந்த சங்கற்பமானதே ஒரு அற்புதமான புரட்சிக் கொள்கையாகும். வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையோ, அல்லது அவைகளை வாங்குவதற்குண்டான சாதனத்தையோ, நாம் பிறருக்கு இலவசமாக கொடுக்கும்பொழுது, அவைகளை பெறுபவர்களுக்கு நாம் பெரிய உபகாரம் செய்துவிட்டதாக கருதுகிறோம். அவைகளை பெறுபவருடைய தன்மதிப்பு மறைந்து விடுகிறது. ஆனால் நாம் உற்பத்தி சாதனங்களையோ, உழைப்புக் கருவிகளையோ கொடுக்கும் பொழுது அவைகளைப் பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு நாம் பெரிய உதவி புரிந்ததாக எண்ணமே தோன்றுவதற்கில்லை.

— தாதா தார்மாதிகாரி

## தீபாவளி கதர் விற்பனை அறிக்கை.
### திருப்பூர் விபாகத்தில்

| வபரம். | 1952 வருட தீபாவளி விற்பனை | 1953 வருட தீபாவளி விற்பனை |
|---|---|---|
| | ரூ. | ரூ |
| சில்லரை விற்பனை | 70,467 | 93,737 |
| நூலுக்கு கதர் மாற்றியது | 26,374 | 30,951 |
| நூற்போர் அட்வான்ஸுக்கு கதர் விநியோகித்தது | 48,964 | 88,315 |
| இதர தொழிலாளிகளுக்கு விற்பனை | 1,886 | 1,539 |
| கிராமோதய கதர் சங்கங்களுக்கு சப்ளை செய்தது | —— | 17,331 |
| | 1,47,691 | 2,31,873 |

சஞ்சாலக்,

சென்னை நகரில் தீபாவளி கதர் விற்பனை

1952–53 ரூ. 24,409 1953–54 ரூ. 50,742

— ஸி. டி. வீராகவலு

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்படுகிறது.)

## இந்த இதழில்


மது விலக்கு — திரு எ. வி. ஓல்சன் 5

ஆரோக்கியத்தை சீர்குலைக்கும் அலுமினியம் — கிருஷ்ணமூர்த்தி மிர் மிரா 5

ஏழைமையும் — வேலையில்லாத் திண்டாட்டமும் — பேராசிரியர் எம். ஆர். அகர்வால் 6

நிர்வாகம்! புரோகிதம்! வியாபாரம்! அரசாட்சி! நான்குவித சுரண்டல்கள் — வினோபா 8

சம்பத்து தானம் —வினோபாவின் புதிய இயக்கம் — ஜவாஹர்லால் நேரு 8

புரட்சிகரமான சங்கற்பம்— பணத்திலிருந்து விடுதலை — தாதா தர்மாதிகாரி 8

தீபாவளி கதர் விற்பனை அறிக்கை 8


"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0–1–0 வருட சந்தா ரூ. 1–8–0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.